களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு விடுகிறது. வேண்டியவர் களுக்குப் படுக்கை கொடுக்கிறீர்கள், வேண்டாதவர்களுக்கு பாயில் கீழே படுக்கச் சொல்கிறீர்கள் என்றெல்லாம் சொல்கிற நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்த நோயாளிகளுடைய நலனைக் கருதி அதிக படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கு விரைவில் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இப்போது 30 படுக்கை வசதியுடன் அந்த மருத்துவமனை இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கேயிருக்கிற சமூகநலச் சங்கங்கள், வசதி படைத்த வர்களை அணுகி புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவார் என்றால், அரசு, நிதிநிலையைக் கருதி படுக்கை வசதி எண்ணிக்கையை அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க நடவடிக்கை.

*5494—திரு. கே. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேந்தமங்கலம், புதுசத்திரம், நாமகிரிப்பேட்டை ஆகிய ஒன்றியப் பகுதிகளின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம், புதுச்சத்திரம் மற்றும் நாமகிரிப்பேட்டை ஆகிய ஒன்றியப்பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் வாயிலாகக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனை

*6253—திரு. எம். முத்தையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையை வ.உ.சி. மருத் துவமனை என்று பெயர் சூட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

[1990 ஏப்ரல் 20

இந்தக் கேள்வியைத் தாமதமாகக் கேட்டிருக்கிறார். கலைஞர் அவர்களின் அரசு கேள்வி வருவதற்கு முன்பே நடைமுறைப் படுத்துகிற அடிப்படையில் வ.உ.சி. அரசு மருத்துவ மனை என்று, பெயர் முதலில் சூட்டப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, பெயர் சூட்டிய பிறகாவது அந்த மருத்துவமனைக்கு நல்லமுறையில் நவீன வசதிகளைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்ட மருத்துவமனை இன்றைக்கு அப்படியே இருக்கிறது. எந்த சௌகரியமும் இல்லை. நாங்கள் நோயாளிகளை முக்கியமாகப் பார்க்க வேண்டுமென்றால் தூத்துக்குடிக்கு போகவேண்டும் அல்லது கோவில்பட்டிக்கு ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும். அந்தத் தாலுக்காவில் இது ஒரு மருத்துவமனை தான் இருக்கிறது. ஆகவே, படுக்கை வசதிகளையும், நவீன வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பெயர் மாற்றத்தைத் தான் கேட்டிருக்கிறார். வ.உ.சி. மருத்துவமனை என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக, பெயரை வைத்திருக்கிற அரசு, பெயருக்கு ஏற்ப நவீன வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் நல்லமுறையில் நவீன வசதிகளை ஏற்படுத்தவிருக்கிற இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி நடைபெறும் பேச்சுவார்த்தை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அ. இ. அ. தி. மு. க. கலந்து கொள்ளாதது குறித்து

*திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இன்று காலையில் கூட்டப்பட்டிருந்த காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமான அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நடுவர்....